[22nd July 1964

திரு. எம். தண்டாயுதபாணி: இதுபோன்று பிரிக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் எல்லா இடங்களிலும் இருப்பதால், தேர்தலுக்கு முன்பாகப் பிரித்து, தேர்தல் நடத்தும் உத்தேசம் அரசாங்கத்துக்கு உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சில நாட்களுக்கு முன்பு இதே மாதிரிக் கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது, இப்பொழுது முடிவு எடுப்பதற்கில்லை, எலெக்‌ஷன் கமிஷன் அசெம்பிளி, பார்லிமெண்ட் தொகுதிகளைப் பிரிவினை செய்து, அதற்குப் பின்புதான் முடிவு எடுக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறேன்.

திரு. ம. கமலநாதன்: இப்படி சில பஞ்சாயத்துக்கள் ஒரு பஞ்சாயத்து யூனியனிலிருந்து மற்றொரு பஞ்சாயத்து யூனியனுக்குச் சேருகிற சமயத்தில், அந்தப் பஞ்சாயத்து யூனியன் அந்தப் பஞ்சாயத்துக்களை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று தீர்மானம் போட்டு நிறைவேற்றி அனுப்பினல், அரசாங்கம் என்ன செய்யும்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இவைகளை எல்லாம் கலெக்டர் அவர்களுக்கு மறுபடியும் அனுப்பி, அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று அறிந்து, சர்க்கார் முடிவு எடுக்கும்.

* 627 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஒரு பஞ்சாயத்து யூனியனிலுள்ள திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் செலவழியாத தொகையை தேவைப்படும் மற்றைய பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இல்லை.

குடிதண்ணீர் அளிப்பு (தூத்துக்குடி)

* 628 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தூத்துக்குடி துறைமுகத்திற்கு ஆற்றுத் தண்ணீர் சப்ளைக்குரிய திட்டத்தில் ஆற்றிற்கும் துறைமுகத்திற்கும் இடையிலுள்ள கிராமங்களுக்கும் (wayside villages) குடி தண்ணீர் அளிப்பதற்கு வகை செய்யப்படுமா?

(இ) அப்படி பலன் பெறும் கிராமங்கள் எவை எவை?

கனம் திரு. வெ. ராமையா: (அ) இவ்விஷயம் ஆலோசனையிலுள்ளது.

(இ) இத்திட்டம் சம்பந்தமான விவரங்களை இன்னும் முடிவு செய்யவில்லை.

22nd July 1964]

திரு. எம். எஸ். செல்வராஜன் : அந்தக் குடித்தண்ணீர்த் திட்டம் தூத்துக்குடி துறைமுகத்திற்கு மாத்திரமா அல்லது விஸ்தரிக்கப் படும் தூத்துக்குடி நகருக்கும் அங்கு வளர இருக்கும் தொழிற் சாலைகளுக்கும் சேர்த்து அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தூத்துக்குடி ஹார்பருக்கு திட்டத்தைத் தயாரித்து அதற்கு மேலே அந்த நகரம் தொழிற் துறை யிலே வளர்ச்சியடையும்போது அதற்கு எவ்வளவு தேவைப்படும் என்று பரிசீலனை செய்யப்படும்.

திரு. சி. பொன்னுசாமி : தூத்துக்குடித் துறைமுகத்திற்கு தண்ணீர் வசதிக்கும் அந்த நகரத்தில் வளரும் தொழில்களுக்கும் ஸ்ரீவைகுண்டத்திலிருந்தும் தாம்பிரபரணியிலிருந்தும் இரண்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அது வரும் பகுதிகளி லுள்ள கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சர்வே செய்திருக்கிறார்களா ? அப்படியானால் அந்த கிராமங்கள் எல்லாம் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவையெல்லாம் பரிசீலனை யிலிருக்கிறது என்று நான் சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தூத்துக்குடி குடிதண்ணீர் திட்டத்தை எப்படி அமல் நடத்த வேண்டுமோ அதைப்போலவே பொதுவாக மத்திய அரசாங்கம் நடத்தும் எல்லாத் திட்டங் களிலும் அருகிலுள்ள பகுதிகளில் மக்கள் குடியேறி வசிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எங்கெல்லாம் குடிதண்ணீர் திட்டத்தை மத்திய அரசாங்கம் மேற்கொள்ளுகிறார்களோ அங் கெல்லாம் அருகிலுள்ள கிராமங்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்யக்கூடிய ஒரு இணைந்த திட்டத்தை தயாரிக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் நமது அர சாங்கம் கோருவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது ஒரு பொதுவான கேள்வி. எங்கு மத்திய அரசாங்கம் தொழிற்சாலைகள் வைக்கின்றதோ அது போன்ற இடங்களில் பெரிய திட்டத்தை நிறைவேற்றும்பொழுது அருகிலுள்ள கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுக்கவேண்டுமென் பதை பரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். கனம் அங் கத்தினர் தனிப்பட்ட தொழிற்சாலைகளைக் குறித்து எனக்கு எழுதி னால், பரிசீலனை செய்து மத்திய அரசாங்கத்திற்கு எழுதி நட வடிக்கையெடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

அரசாங்க ஊழியர்களுக்கு வீட்டு வசதி

* 629 **கேள்வி—திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் அரசாங்கம் கட்டிடங்களைக் கட்டி வாடகைக்கு விடும் உத்தேசமுண்டா ?